(iii) ஓசூர், கிருஷ்ணகிரி வட்டங்களில் வறட்சி நிலையும், நிவாரண வேலைகளும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, Under rule 42 of the Assembly Rules, I have given notice of the following motion :—

That the business of this House stands adjourned to discuss a matter of urgent public importance, namely the severe drought in Hosur Taluk and in the western part of Krishnagiri Taluk of the Dharmapuri District, and the need to take up immediate and suitable steps.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானம் அவசரமும் பொது முக்கியத் துவமும் வாய்ந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் விதிமுறைகளின் கீழ் வரவில்லை. பொதுவாக, ஓசூர் தாலுகாவும், கிருஷ்ணகிரி வட்டாரமும் வடகிழக்கு, தென்மேற்கு இரு பருவக் காற்றுகளினால் நல்ல மழையைப் பெற்றிருக்கின்றன. வழக்கமாக விளைகின்ற நெல், ராகி போன்ற பயிர்கள் நன்றாக விளைந்திருக்கின்றன. இந்தப் பயிர்கள் எல்லாம் 50 சதவிகிதத்திற்குமேல் அறுவடையாகியிருக்கின்றன. இன்றுகாலை ஒரு மணி நேரத்திற்குமுன் தர்மபுரி மாவட்டக் கலெக்டர் இந்தச் செய்தியை அறிவித்திருக்கிறார். கனம் உறுப்பினர் கூறுகின்ற ஜனவரி முதல் எப்ரல் வரையுள்ள நான்கு மாதங்கள் வரை அங்கு பஞ்ச நிலைமை என்பதற்கான ஆதாரம் எதுவும் இல்லை. நீர்நிலைகள் கொஞ்சம் பாதிக்கப் பட்டிருக்கலாம். ஆனால் புஞ்சைத் தானியங்களைப் பொறுத்தவரை, கொள், கம்பு, ராகி போன்றவை நல்லமுறையில் விளைந்திருக்கின்றன. கிருஷ்ணகிரி வட்டாரத்திலும் பஞ்ச நிலைமை நிலவவில்லை. கூடுமான வரையில், ரெவின்யூ அதிகாரிகளும், மாவட்டக் கலெக்டரும் எந்தெந்தக் காரியங்களை எப்பொழுது எப்பொழுது செய்ய வேண்டுமோ அதைச் சரியாகச் செய்து வருகின்றார்கள். கனம் உறுப்பினர் கூறுகின்ற மாதிரி இது அவசரப் பிரச்சினைக்கு உரிய நிகழ்ச்சி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பருவமழை தவறுவதும், அதன்காரணமாக விளைச்சல் குறைவதும் அன்றாடம் நடைபெறும் சாதாரண நிர்வாகத்திற்கு உட்பட்ட காரியமாகையால், இது அவசரமும் பொதுமுக்கியத்துவமும் வாய்ந்ததல்லவாதலால், சபையின் அலுவல்களை ஒத்திவைக்க வேண்டிய அவசியமில்லையென்று கூறி, அனுமதியை மறுக்கிறேன்.

(iv) இராமநாதபுரம் மாவட்டத்தில் சில வட்டங்களில் விளைச்சலின்மையும், வரி, கடன் வசூலும்

திரு. கரு. சீமைச்சாமி : துணைப் பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 42-ன் கீழ் அவையின் இன்றைய நடவடிக்கையை ஒத்திவைத்து, கீழ்க்கண்ட அவசர முக்கியத்துவம்